1981 மார்ச் 4]

ரொம்ப லிமிடெட்டாக இருக்கிறது. ஆகவே, இதில் '..பர்தர் இம்ப்ரூமெண்ட்,' எப்போது எதிர் பார்க்கலாம் என்ற கால நிலையை எதிர்பார்க்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிக்குச் சென்றிருந்தபோது ஒரு யோசனை வந்தது. அங்கு கொள்ளிடம் நதி செல்கிறது. நிரம்ப தண்ணீர் போகிறது. காவிரியும் பாய்கிறது. இருந்த போதிலும் திருச்சியில் பெண்கள் குடிதண்ணீருக்காக பைப்பில் பல மணி நேரம் நிற்கிற நிலைமையைப் பார்த்தபோது, 'சர்ப்பிளஸ் வாட்டர்,' வரும்போது தேக்கி வைக்கிற முறைகள் ஏதாவது செய்ய வேண்டும் என்று அதிகாரிகளிடம் சொல்லியிருக்கிறேன். அது தான் திருச்சி நகருக்குத் தண்ணீர் கிடைப்பதற்கு நல்ல முறையாக இருக்குமென்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி நகரத்தில் இருக்கிற மத்திய சிறைக்குத் தண்ணீர் எப்போதுமே பற்றாக் குறையாக இருந்து வருவது அரசுக்குத் தெரியுமா.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படியே போனால் இன்னின்னார் வீட்டிற்குத் தண்ணீர் வரவில்லை, அரசுக்குத் தெரியுமா என்று கேட்பார்கள், அதற்கெல்லாம் அமைச்சர் பதில் சொல்ல முடியாது.

குன்னூர் நகரில் குடிநீர் வடிகால் வாரிய வேலைகள்.

*வினா எண். 368—திரு. மு. அரங்கநாதன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் குன்னூர் நகரில் 1968 ஆம் ஆண்டு திட்டமிட்டு ஆரம்பிக்கப்பட்ட வேலை இன்று வரை முடியவில்லை என்பது உண்மையா ?

(ஆ) எப்போது அந்த வேலை முடிவடைந்து நகராட்சிக்கு ஒப்படைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்களுக்குள் முடிவுற்று நகராட்சியிடம் ஒப்படைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குடிநீர் வடிகால் வாரியம் நீண்டகாலமாகச் செயல்பட்டு வருகிறது. இருந்தும் இந்த வேலையில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. அங்கிருக்கிற மக்கள் தண்ணீருக்காக மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதனால் உடனடியாக அந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஜுன் 1981-ல் வேலை முடியும் என்று சொல்லியிருக்கிறேன். மார்ச் மாதம் வந்துவிட்டது. இன்னும் மூன்று மாதங்களுக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அருள்கூர்ந்து பொறுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுரை மாவட்டத்தில் தொழிலாளர் காலனிகளில் கட்டப்பட்டுள்ள வீடுகள்.

*வினா எண். 369—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மானியத்துடன் கட்டப்பட்ட மதுரை மாவட்டத்திலுள்ள பசுமலை, பரவை, கப்பலூர் ஆகிய மில் தொழிலாளர்களின் காலனியிலுள்ள வீடுகளை குடியிருக்கும் தொழிலாளர்களுக்கு கட்டப்பட்ட விலையில் 80 சதவிலைக்கு கொடுத்து விடலாமென மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு ஆலோசனை ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) மற்றும் (ஆ) ஆம். தொழிலாளர் மானிய வீட்டு வசதி திட்டத்தின்கீழ் தனியார் துறையில் கட்டப்பட்டுள்ள வீடுகளை அவற்றில் குடியிருப்பவருக்கு விற்பது விரும்பத்தக்க செயல் இல்லை என்று கருதி இவ்வரசு அவ்வாறு விற்கலாம் என்று மத்திய அரசின் பரிந்துரையை ஏற்கத் தேவையில்லை என்று முடிவு எடுத்து, இந்த முடிவை மத்திய அரசுக்கும் தெரிவித்துள்ளது.